மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.11.2015

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 9.11.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், ஒரத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரஜினி;

10.11.2015 அன்று நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், தெங்குமரஹாடா கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னவன் என்பவரின் மனைவி திருமதி கலாமணி;

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், செம்மநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிசாமி என்பவரின் மகன் மணிவாசகம்;

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவனடியார் என்பவரின் மகன் கணேசன்; பண்ருட்டி வட்டம், கருகை கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரின் மனைவி திருமதி அலமேலு; விசூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நரசிம்மன் என்பவரின் மனைவி திருமதி அஞ்சலை; ஆலப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் என்பவரின் மகன் பரசுராம்; குமணன்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜோதி என்பவரின் மகன் வேலு; புவனகிரி வட்டம், வடகிருஷ்ணபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜம்புலிங்கம் என்பவரின் மகன் பாலகிருஷ்ணன்;

11.11.2015 அன்று கடலூர் மாவட்டம், குறிஞ்சிபாடி வட்டம், எல்லப்பன் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரமுத்து என்பவரின் மகன் விக்னேஷ்; கல்குணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமானுஜம் என்பவரின் மகன் ராமலிங்கம்; மகள் லோகநாயகி; பூதம்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. தனசிங் என்பவரின் மகன் தனசேகர்;

–– ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

10.11.2015 அன்று கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், சிலம்பிநாதன்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆரூன் என்பவரின் மகன் ஞானமுத்து;

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பு என்பவரின் மகன் நாகராஜன்;

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் மேல்பாதி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜகோபால் என்பவரின் மனைவி திருமதி விசாலாட்சி;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், அருமனை கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லையன் என்பவரின் மகன் ராமசந்திரன்;

–– ஆகியோர் மழையின் காரணமாக சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த இந்த 17 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**